சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–30.11.2020

## <u>சாதாரணக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 15–ஆம் நாள் (நவம்பர் திங்கள் 30–ஆம் நாள்:–30.11.2020) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் வண்டி எண்.TN60Z5198க்கு சில மராமத்துப் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.137, நாள்.29.10.2020 அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை செய்வதற்கு 06.11.2020ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | அகரம் மோட்டார்ஸ், கம்பம் | ரூ.1,24,100/– |
| 2. | AMN மோட்டார்ஸ், கம்பம் | ரூ.1,34,650/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் அகரம் மோட்டார்ஸ், கம்பம் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு மற்றும் அதற்கான தொகையும் வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4485/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **148, நாள்.30.11.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக சின்னமனூர் நகராட்சியில் நூறு சதவீதம் (100%) அனைத்து வீடுகளிலும் முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதியின் படி முறையாக தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. எனவே சின்னமனூர் நகராட்சியினை குப்பை இல்லாத நகராட்சியாக (Garbage Pre city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழ்க்கு (Self Declaration) பெற பொது மக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பொது மக்களிடம் பெறும் பொருட்டு செய்தி தாள் விளம்பரம் வெளியிடவும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று செய்தித் தாள் விளம்பரம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1238/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **149, நாள்.30.11.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி திறந்த வெளியில் மலம், ஜலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையே கடை பிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் நிலையான (ODF +) சான்று பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம், ஜலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதி மொழி சான்றிதல் பெற (Self Declaration) நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் இது தொடர்பாக பொது மக்களிடம் தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற செய்தித்தாள் விளம்பரம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பணி தொடர்பாக தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று விளம்பரம் வெளியிட்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1238/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **150, நாள்.30.11.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பகுதிகளில் ODF++ ஆய்வு மேற்கொள்ள இருப்பதால் சீப்பாலக்கோட்டை ரோடு, திருவள்ளுவர் பள்ளித் தெரு, விஸ்வன்குளம் (வடக்கு) மற்றும் அய்யனார்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3560/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **151, நாள்.30.11.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பகுதிகளில் ODF++ ஆய்வு மேற்கொள்ள இருப்பதால் வாரச்சந்தை பின்புறம், உழவர் சந்தை, சாமிகுளம், ஸ்வீப்பர் காலனி, சந்தைப்புதூர் தெரு, மெயின் ரோடு, வண்டிப்பேட்டை, காந்தி நகர் காலனி மற்றும் சொக்கநாதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.3560/2020/இ1)**

**தீர்மான எண், நாள்** **152, நாள்.30.11.2020**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.6

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட விவரப்படியான உரிம இனங்கள், அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.09.2008–இன்படி 2020–2021ம் நிதியாண்டுடன், மூன்றாண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதனால் கீழ்க்கண்ட உரிம இனங்களை 01.04.2021 முதல் மூன்றாண்டுகளுக்கு ஏலம்–உடன்–ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கவும், மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான 2021–2022ம் ஆண்டு பொது மற்றும் தனிக்கட்டுப்பாட்டு விதிகளுக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏலம் விடப்படும் உரிம இனங்களின் விவரம் | ஏலம் கேட்கும் முன் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை | ஏலம் கேட்கும் முன் தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்று | சான்று அளிக்காவிடில் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை | மின் கட்டணம் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 300000 | 500000 | 100000 | 1000 |
| 2. | ஆடு அடிக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 100000 | 100000 | 50000 | 1000 |
| 3. | சீப்பாலக்கோட்டை சாலையில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50000 | 150000 | 50000 | 500 |
| 4. | வண்டிப்பேட்டை அருகில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 100000 | 100000 | 50000 | 500 |
| 5. | பெரியகுளம் குமுளி சாலையில் உள்ள புளியமரங்களின் மேற்பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் | 15000 | – | – | – |
| 6. | முத்துலாபுரம் சாலையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் | 15000 | – | – | – |

அலுவலகக் குறிப்பு:– **1.மேற்கண்ட உரிம இனங்களில் வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ளவற்றை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் உடன் ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏலம் விட அனுமதிக்கலாம்.**

**2. 2021–2022ம் ஆண்டிற்கான பொது மற்றும் தனி உரிமக் கட்டுப்பாடுகள் நிபந்தனைகள் மற்றும் விலை நிர்ணயப் பட்டியல்களையும் அங்கீகரிக்கலாம்.**

**3. மேற்படி ஏல நடவடிக்கைகளுக்கான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **153, நாள்.30.11.2020**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (Sewerage Treatment Plant) உள்ள கிளாரியேட்டரில் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும் குளோரினேட்டரில் கழிவு நீர் பயன்படுத்தி இயக்குவதால் அடைப்பு ஏற்பட்டு இயங்காமல் உள்ளது. எனவே சின்டெக்ஸ் வைத்து போர் தண்ணீர் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

மேற்படி பணிகள் அவசர அவசியம் கருதி உடன் செய்து முடிக்காவிடில் கழிவு நீர் சுத்திகரிக்கும் பணி நடைபெறாமல், கழிவு நீர் வெளியேறி நகர்வாழ் பொது மக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் நிலை உருவாகும். எனவே மேற்படி கிளாரியேட்டரில் பழுது பணி மேற்கொள்ளவும், குளோரினேட்டரில் கழிவு நீர் பயன்படுத்துவதால் ஏற்படும் அடைப்பினை அவசரப் பணியாக மேற்கொள்ளவும், நகர்வாழ் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, 1920–ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–இன் படி மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதால் ஆன செலவு ரூ.251591/–ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **பதிவு செய்யலாம். (ந.க.எண்.6495/2018/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **154, நாள்.30.11.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட சாமிகுளம் பகுதியில் 2018–2019–ஆம் ஆண்டிற்கான மூலதன மான்ய நிதி திட்டத்தின் கீழ் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி குடியிருப்புகளுக்கு கூடுதல் பணியாக சம்ப், மழைநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **155, நாள்.30.11.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.9**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட சாமிகுளம் பகுதியில் மூலதன மான்ய நிதி 2017–2018 திட்டத்தின் கீழ் துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்படி குடியிருப்புகளுக்கு பாதுகாப்பு கருதி வடக்கு (ஓடை ஓரம்) மற்றும் கிழக்கு (முன் பக்கம் சாலை ஓரம்) பக்கம் சுற்றுச் சுவர் அமைக்கவும் (மேற்குப் பக்கம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் அதனை அப்புறப்படுத்திய பின்னர் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டும்) அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **156, நாள்.30.11.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட சாமிகுளம் பகுதியில் மூலதன மான்ய நிதி 2017–2018 திட்டத்தின் கீழ் துப்புரவுப் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்பு வளாகத்தில் ஆழ்துளை கிணறு மற்றும் மின் இணைப்பு பெறுவதற்கு மதிப்பீட்டில் போதிய நிதி இல்லாததால் மேற்படி பணியினை மேற்கொள்ள இயலவில்லை. மேற்படி ஆழ்குழாய் கிணறு அமைத்து, மின் மோட்டார் பொருத்தினால்தான், துப்புரவுப் பணியாளர்கள் குடியேற வசதியாக இருக்கும் என்பதால், மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.8.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **157, நாள்.30.11.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குள் அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகள் பராமரிப்புப் பணி ஆண்டிப்பட்டியை சேர்ந்த M/s சடையாண்டி ஏஜென்சீஸ் என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. மேற்படி பராமரிப்புப் பணிக் காலம் 07.12.2020–இல் முடிவடைவதால், அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்புப் பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள, இந்நகர்மன்றத்தின் 29.10.2020ம் நாளிட்ட 117–ஆம் எண் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு முறை வழியாக கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருவினை மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள், தனது 19.11.2020ம் நாளிட்ட ந.க.3340/2020/பி3 எண் கடிதத்தின் மூலம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு உரிய அனுமதி வழங்க வேண்டி மேலனுப்பப்பட்டுள்ளது.

தெருவிளக்கு பராமரிப்புப் பணி அத்தியாவசியப் பணி என்பதால், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி கிடைக்கும் வரை அல்லது 08.12.2020 முதல் மூன்று மாதத்திற்கு தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை ஏற்கனவே பார்த்து வரும் ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்சீஸ் நிறுவனம் மூலம் (பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க) தொடர்ந்து பராமரித்து வரப் பணிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **நகர்வாழ் பொது மக்களின் நலன் கருதி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி வழங்கும் வரை 08.12.2020 முதல் தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு தெரு விளக்கு பராமரிப்புப் பணியினை ஆண்டிப்பட்டி M/s சடையாண்டி ஏஜென்சீஸ் நிறுவனம் கவனித்து வர அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **158, நாள்.30.11.2020** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.12**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN60T4228 என்ற டம்பர் பிளேசருக்கு 2020–21ம் ஆண்டு புதுப்பித்தல் மேற்கொள்ளும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் 26.11.2020 ஆம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | சிவகாமி ஆட்டோ ஒர்க்ஸ், மெயின் ரோடு, சின்னமனூர் | ரூ.146000/– |
| 2. | நேஷனல் பாடி பில்டிங் ஒர்க்ஸ்,<br>நேருஜி பஸ்நிலையம் எதிர்புறம், சின்னமனூர் | ரூ.144600/– |

**அலுவலகக் குறிப்பு:–**
1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த நேஷனல் பாடி பில்டிங் லேபர் ஒர்க்ஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0661/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **159, நாள்.30.11.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை புரட்சித் தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பதற்கு உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டு வரப்பெற்ற அரசு ஆணை (நி) எண்.170, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.தி.ந) துறை நாள்.27.10.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3625/2020/இ3)**
**தீர்மான எண், நாள்** **160, நாள்.30.11.2020**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியின் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மினி பவர் பம்ப் மோட்டார்களின் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.624, நாள்.08.03.2019ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 21.08.2020ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. **குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 5HP மோட்டார் பழுது பார்த்தல் பணி**

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.15300/– |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.15800/– |
| **2.விஸ்வன்குளம், கீழப்பூலானந்தபுரம், புது கிணறு ஆகிய இடத்தில் 1.5HP மோட்டார்கள் பழுது சரிபார்த்தல் வேலை** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.2800/– |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.2950/– |
| **3.தலைமை நீரேற்று நிலையம் 50HP மோட்டார் Contact Unit, Starter Wiring, Nop Set பழுது சரி பார்த்தல் வேலை** | | |
| 1. | திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் | ரூ.14100/– |
| 2. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.14600/– |

அலுவலகக் குறிப்பு:– **1.வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.ஆர்.பரமானந்தன், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.ஆர்.பரமானந்தன் ஒப்பந்தக்காரர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்..**

**2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6130/2016/இ2)**

**தீர்மான எண், நாள்** **161, நாள்.30.11.2020**

**தீர்மானம்**

*******

பொருள் எண்.15

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN60S9443 என்ற காம்பாக்டர் வாகனத்திற்கு 2020–21ம் ஆண்டு புதுப்பித்தல் மேற்கொள்ளும் பொருட்டு சில மராமத்துப் பணிகள் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ்,<br>வார்டு எண்.32/42ஏ, சுக்குபிள்ளை தெரு, கம்பம் | ரூ.149900/– |
| 2. | ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்<br>அரசு மருத்துவமனை எதிர்புறம், கம்பம் | ரூ.156400/– |

அலுவலகக் குறிப்பு:–

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஸ்ரீமுருகன் ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ், கம்பம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பொது சுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2528/2020/எச்1)

தீர்மான எண், நாள் 162, நாள்.30.11.2020

தீர்மானம்

*******

பொருள் எண்.16

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் அமையும் கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சின்னமனூர் நகர்ப்பகுதி சாலையான, பொன்னுச்சாமி தியேட்டர் முதல் நேருஜி பேருந்து நிலையம் வரை சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் பொது மக்கள் சாலையினை கடப்பதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதாலும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைவர் 30.09.2020 தேதியன்று நடைபெற்ற சாலை பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டத்தில் மேற்காணும் பொருள் கலந்துரையிடப்பட்டதில் நெடுஞ்சாலைத் துறையுடன் சின்னமனூர் நகராட்சி இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்ட பின்பு, சாலையின் பக்கவாட்டில் உள்ள மண் குவியல்கள், கற்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக வீடியோ காட்சிகள் பதிவு செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.3106/2020/எப்1)

தீர்மான எண், நாள் 163, நாள்.30.11.2020

தீர்மானம்

*******